வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ஈළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 15.01.2026 வியாழக்கிழமை | இதழ் : 15 | பக்கங்கள் : 08




# போதையற்ற நாட்டை உருவாக்க ஜனாதிபதியுடன் கைகோருங்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் வடக்கு மக்களுக்கு யாழில் அழைப்பு



**த.பிரதீபன், பு.கஜிந்தன்**
*யாழ்ப்பாணம், ஜனவரி 15*

போதையற்ற தாய் நாட்டை உருவாக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் செயல் திட்டத்துக்கு வடக்கு மக்கள் கைகோக்க வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடந்த போதைப்பொருட்களை ஒழிப்பதற்கான முழுநாடும் ஒன்றாக... தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்ட செயல்பாட்டு குழுவை நிறுவும் நிகழ்வை தொடக்கி வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

போதையற்ற தாய் நாட்டை உருவாக்கும் ஜனாதிபதியின் தேசிய வேலைத் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அதன் விரிவாக்கத்தை கிராம மட்டங்களில் மேற்கொள்வதே தற்போதைய திட்டம். எதிர்கால சந்ததியினரை போதை அரக்கனிடமிருந்து பாதுகாக்கும்

07




வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்...!
ஈழநாடு

## போதைப்பொருளை கட்டுப்படுத்த மக்களும் கைகோக்கவேண்டும்!

### வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

*கிளிநொச்சி, ஜன. 15*

உயிர்கொல்லி போதைப்பொருளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையைத் தனித்து முப்படையினர் மற்றும் பொலிஸார் மாத்திரமே மேற்கொண்டுவிட முடியாது. இந்த நடவடிக்கையில் பொதுமக்களும் கைகோக்க வேண்டும். அதன் மூலமே எங்கள் எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்க முடியும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

விஷ போதைப்பொருட்களை முழுமையாக ஒழிப்பதற்கான "முழுநாடுமே ஒன்றாக" எனும்

07

## புதிய இலங்கையை கட்டியெழுப்ப தைப்பொங்கல் நாளில் இணைவோம்!

*கொழும்பு, ஜன. 15*

நல்லிணக்கம்மிக்க ஒரு புதிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி பூணுவோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள தைப் பொங்கல் வாழ்த்துச் செய்தியில்

07



## ஒரு தேசமாக மீண்டெழுவதற்கு கைகோக்க முன்வாருங்கள்!

### தைப்பொங்கல் வாழ்த்தில் ஜனாதிபதி

*கொழும்பு, ஜன. 15*

அண்மையில் நாம் சந்தித்த பேரிடரிலிருந்து ஒரு தேசமாக மீண்டெழும் நம்பிக்கையுடனும் அயராத முயற்சி மற்றும் உறுதியுடனும் இதுவரை இல்லாத அளவிலான பாரிய புனரமைப்பு செயல்பாட்டில் நாம் ஒன்றாக கைகோத்துள்ளோம். இந்த

07



## பால்மாவின் விலை குறைகிறது

*கொழும்பு, ஜன. 15*

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை குறைப்பதற்கு பால்மா இறக்குமதியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சு

07

## 13 நாட்களில் விபத்துகளில் 82 பேர் மரணம்

*கொழும்பு, ஜன. 15*

நடப்பு ஆண்டின் முதல் 13 தினங்களில் மாத்திரம் விபத்துகளில் 82 பேர் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா

07

## திருகோணமலை புத்தர் சிலை வழக்கு; 4 பிக்குகள் உட்பட 9 பேருக்கு மறியல்!

### திருமலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

*திருகோணமலை, ஜன. 15*

திருகோணமலை கடற்கரையில் அனுமதி பெறாமல் கட்டடம் அமைத்து அங்கு, புத்தர் சிலையை வைத்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 4 பிக்குகள் உட்பட 9 பேரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக் கமறியலில் வைக்க திரு கோணமலை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்பு திணைக்களத்தால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிலேயே நேற்று புதன்கிழமை இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.

07

## ஜனாதிபதி அநுர குமார இன்று வடக்கு வருகிறார்

*யாழ்ப்பாணம், ஜன. 15*

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இரு நாட்கள் பயணமாக இன்று வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டத்துக்கு வருகை தரும் அவர் கொன்னையன் குடியிருப்பு காற்றாலை மின் திட்டத்தை தேசிய மின்சார கட்டமைப்பில் இணைக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். இதைத் தொடர்ந்து, நண்பகல் 12 மணிக்கு சௌத்பார் காற்றாலை

07

## இணக்கப்பாடுகள் அமுலாகவிடின் தொடர் தொழிற்சங்க போராட்டம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

*கொழும்பு, ஜன. 15*

இலவச சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சர் வழங்கிய இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறினால், நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில், நாட்டின் சுகாதார சேவை, மருத்துவர்களின்

07

## மின்சார கட்டணம் அதிகரிக்கப்படாது

*கொழும்பு, ஜன. 15*

நடப்பு ஆண்டின் முதலாம் காலாண்டில் மின்சார கட்டணத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றின்மூலம் இந்த விடயத்தை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மின் கட்டணத்தை 11.57 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

07

## கஞ்சாவுடன் இருவர் கைது

**த. பிரதீபன்**
*வடமராட்சி, ஜன. 15*

28 கிலோ கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய விடியலை மலரச் செய்வதாக இந்த தைப்பொங்கல் அமையட்டும்

### தைப்பொங்கல் வாழ்த்தில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜன. 15

இந்த தைப்பொங்கல் திருநாள், புறக்கணிப்பின் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்து, வடக்கு மக்களின் வாழ்வில் புதிய விடியல் மலரச் செய்யும் திருப்புமுனையாக அமைய வேண்டும் - என்று கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தைப்பொங்கல் என்பது வெறும் விழா அல்ல. அது உழைப்புக்கான மரியாதை, இயற்கைக்கான நன்றி, ஒடுக்குமுறைகளை எதிர்த்து நிற்கும் மக்களின் உறுதி மற்றும் எதிர்காலத்தை நோக்கிய நம்பிக்கையின் அரசியல் பிரகடனம் ஆகும்.

பல தசாப்தங்களாக போராலும் புறக்கணிப்பாலும் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் வாழ்வில் நிலையான முன்னேற்றம், பொருளாதார சுயநிலைத் தன்மை மற்றும் சமூக நீதி உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது அரசின் தெளிவான நிலைப்பாடாகும்.

இதன் ஓர் அங்கமாக - எனது அமைச்சு விடயதானத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நவீன மீன்பிடி தொழில்நுட்ப வசதிகள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் தரையிறக்க மையங்களின் மேம்பாடு, குளிரூட்டல் மற்றும் சேமிப்பு வசதிகள், மீன்வளப் பயிற்சி மையங்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான தொழில்வாய்ப்பு உருவாக்கத் திட்டங்கள் ஆகியவை திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மக்களின் பொருளாதார மீட்பு வெறும் உதவித் திட்டங்களால் அல்ல உரிமைகளுடன் கூடிய வளர்ச்சி மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது. மீனவர்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் மரியாதை எப்போதும் அரசின் முன்னுரிமையாக இருக்கும்.

இந்த தைப்பொங்கல் திருநாள், புறக்கணிப்பின் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்து, வடக்கு மக்களின் வாழ்வில் புதிய விடியல் மலரச் செய்யும் திருப்புமுனையாக அமைய வேண்டும். ஒற்றுமை, உழைப்பு மற்றும் சமூக நீதி ஆகியவை நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கான அடித்தளமாக மாற வேண்டும். அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள் - என்றுள்ளது. (ஐ)

## வடக்கு மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கி பெருகட்டும்

### வடக்கு, ஆளுநர் தைப்பொங்கல் வாழ்த்து



யாழ்ப்பாணம், ஜன. 15

புதிய அரிசியிட்டு, பால் பொங்கி, மகிழ்ச்சி பெருக்கெடுப்பதைப் போல வடக்கு மாகாண மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும், நலமும், மகிழ்ச்சியும் பொங்கிப் பெருக வேண்டும்", இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்.

மேலும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் தனித் துவமான பண்பாட்டுப் பெரு விழாவாகவும் உழவர் திருநாளா கவும் போற்றப்படும் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிரினங்கள் செழித்து வளர்வதற்குப் பெருந்துணை நின்ற சூரிய பகவானுக்கும் சேற்றில் கால் பதித்துச் சோற்றுப் பயிர் விளைவிக்கும் எமது உழவர் பெருமக்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக நின்ற கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் ஓர் உன்னதமான நாளாகவே இந்தத் திருநாள் அமைகின்றது. இயற்கையோடு இயைந்த வாழ்வியலை கொண்ட எமது மக்களின் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் ஒரு மிகச் சிறந்த அடையாளமே இந்தப் பொங்கல் திருநாளாகும்.

எமது வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், விவசாயமே எமது பொருளாதாரத்தின் மிக முக்கிய அடிநாதமாகத் திகழ்கின்றது. எமது மண்ணும், மக்களும் விவசாயத்துடன் பிரிக்க முடியாத பந்தத்தைக் கொண்டவர்கள். அந்த வகையில், இப்பண்டிகையானது எமது மாகாணத்துக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பண்டிகையாகும்.

கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளிப் பேரழிவின் வடுக்களிலிருந்து எமது மக்கள் படிப்படியாக மீண்டெழுந்து வரும் ஒரு காலகட்டத்தில் இம்முறை நாம் தைப்பொங்கலைக் கொண்டாடுகின்றோம். இயற்கையின் சீற்றத்தால் நாம் பாதிக்கப்பட்டிருந்தாலும் எமது மக்களின் மனங்களில் உள்ள நம்பிக்கையும் விடாமுயற்சியும் ஒருபோதும் குறையவில்லை.

புதிதாகப் பிறக்கின்ற இந்தத் தை மாதம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கமாக மட்டுமன்றி, எமது மக்கள் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களை நீக்கி, புதிய வழிகளைத் திறக்கும் ஒரு மாதமாகவும் அமைய வேண்டும். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமைய, சோதனைகளை கடந்து எமது விவசாயம் செழிப்பதற்கும் எமது மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும் இத்திருநாள் வழிவகுக்கட்டும்.

புதிய அரிசியிட்டு, பால் பொங்கி, மகிழ்ச்சி பெருக்கெடுப்பதைப் போல, வடக்கு மாகாண மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும், நலமும், மகிழ்ச்சியும் பொங்கிப் பெருக வேண்டும் - என்றுள்ளது. (ஐ)



இன்றைய தைப்பொங்கல் பண்டிகையையொட்டி திருநெல்வேலி சந்தைப் பகுதியில் வியாபாரம் களைகட்டியிருந்தது...! (படம் - த. பிரதீபன்)

## பருத்தித்துறையில் இயங்கிய படையினரின் கடைக்கு பூட்டு

வடமராட்சி, ஜன. 15

வியாபார உரிமமின்றி இராணுவத்தினரால் நடத்தப்பட்ட உணவு கையாளும் நிலையம் பருத்தித்துறை நகர சபையால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இராணுவ முகாம் அருகே இயங்கிய உணவு கையாளும் நிலையமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த உணவகம் இயங்கிய பகுதிக்கு சென்ற பருத்தித்தறை நகர சபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல், நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ப. தினேஷ் உள்ளிட்டவர்கள் குறித்த உணவகத்தை சோதனையிட்டனர்.

இதன்போது வியாபார உரிமம் பெறப்படாது நிலையம் இயங்கியமை கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. (ஐ)

## இந்தியாவிலிருந்து 237 புறாக்களை கடத்திவந்த 3 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விலை உயர்ந்த புறாக்களுடன் மூவர் நெடுந்தீவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

237 விலையுயர்ந்த புறாக்கள் இந்தியாவில் இருந்து இரகசியமான முறையில் பிளாஸ்ரிக் கொள்கலன்களுக்குள் மறைத்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டன. இது தொடர்பில் தகவல் அறிந்த நெடுந்தீவு கடற்படை, பொலிஸார் புறாக்களை கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களை ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கடத்தப்பட்ட 237 புறாக்களையும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகையும் நீதிமன்றில் சான்றுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## நாகர்கோவிலில் பொது மக்கள் அதிரடிப் படையினர் முறுகல்



வடமராட்சி, நவ. 15

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் ஒருவரை கைது செய்யச் சென்ற பொலிஸார், விசேட அதிரடிப் படையினருக்கும் நாகர்கோவிலை சேர்ந்த பொதுமக்களுக்கும் இடையே நேற்று முறுகல் ஏற்பட்டது. இதனால், அங்கு பதற்றம் நிலவியது.

வழக்கு தொடர்பாக நீதிமன் றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள பெண் ஒருவரை கைது செய்வதற்காக மருதங்கேணி பொலிஸார் விசேட அதி ரடிப் படையினருடன் இணை ந்து நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள பெண்ணின் வீட்டுக்கு சென்றிருந்த னர்.

அந்தப் பெண்ணை கைது செய்த பொலிஸார் அவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத் துச் சென்றனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியை பொலிஸார் மோப்பநாய்கள் மூலம் சோதனையிட்டனர்.

இதன்போது, பொலிஸார் அத்துமீறி செயல்படுகின்றனர் என்று கூறி பொதுமக்களில் சிலர் அவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இதேவேளை, நேற்று அதிகாலை அந்தப் பகுதியில் 9 கஞ்சா பொதிகளை விசேட அதிரடிப் படையினர் கைப் பற்றியிருந்தனர். இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02-08)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் 26 குடும்பங்களுக்கு உதவி!

வடமராட்சி, ஜன. 15

முல்லைத்தீவு - புத்துவெட்டுவான் கிராமத்தை சேர்ந்த 26 குடும்பங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.



ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இந்த உலருணவு பொதி களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத் தார். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.01.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், தை 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## கானல் நீரான அரசியல் தீர்வு

ஈழத் தமிழர் அரசியலுக்கும் தைப் பொங்கலுக்கும் ஒரு தொடர்பு உண்டு. ஒரு காலத்தில் அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் என்னும் கோஷமொன்று முன்வைக்கப்பட்டது. இதற்கு ஒரு காரணம் இருந்தது. அதாவது, தமிழர் அரசியல் மிதவாத நிலையிலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்த பின்னணியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் ஆயுத இயக்கங்களில் இணைந்தனர்.

அந்தக் காலத்தில் இயக்கங்கள் மத்தியில் ஆளணி பிரச்னை என்று ஒன்று இருக்கவில்லை - அந்தளவுக்கு பலரும் சுயவிருப்பின் பெயரில் எவ்வித பிரசாரங்களும் இன்றி இணைந்து கொண்டனர். ஒரு வீட்டைச் சேர்ந்தவர்கள் மாறுபட்ட இயக்கங்களில் இணைந்து கொண்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. பல்கலைக்கழகங்களில் படித்துக் கொண்டிருந்தவர்கள் இயக்கங்களில் இணைந்து கொண்டனர்.

இந்தக் காலத்தில் ஆயுதப் போராட்டத்தின் இலக்கு மிகவும் எளிமையாக விளங்கிக் கொள்ளப்பட்டது. தமிழீழம் என்பது மிகவும் சுலபமான ஒன்று. அதேவேளை இந்தப் போராட்டம் சில ஆண்டுகளில் முடிந்துவிடும் என்றே பலரும் எண்ணியிருந்தனர். ஏனெனில், ஆயுதப் போராட்ட இயக்கங்களில் இணைந்து செயல்பட்டவர்கள் பலர் சில ஆண்டுகளிலேயே வெளியேறினர்.

தாங்கள் சார்ந்த இயக்கங்கள் தொடர்பிலோ தங்களுடைய கடந்த காலம் தொடர்பிலேயே அவர்களிடம் எந்தவொரு குற்றவுணர்வும் இல்லை. காரணம், அவர்கள் சில வருடங்களுக்கு மேல் அதில் இணைந்து பயணிக்க விரும்பவில்லை. ஏனெனில், அவர்கள் ஆயுதப் போராட்டத்தை மிகவும் இலகுவாக புரிந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக தங்களை இடதுசாரிகளாக காண்பிக்க முற்பட்ட இயக்கங்களில் இணைந்து கொண்டவர்கள் பலர் சிவப்பு அட்டை புத்தகங்களின் மூலம் உலகத்தை புரிந்துகொள்ள முயற்சித்தவர்கள். ஆனால், தாங்கள் ஓர் ஆபத்தான பதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம் - இந்தப் பயணம் சில வருடங்களில் முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல என்பதை புரிந்து கொண்டபோது பலரும் தங்களை விடுவித்துக் கொண்டனர். அவர்கள் இன்று மேற்குலகின் தலைநகரங்களில் நல்ல நிலையில் இருக்கின்றனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, ஈழத் தமிழர் அரசியலை உற்றுநோக்கினால் 77 ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தக் காலத்து அரசியல் நகர்வுகளின் இலக்கு என்ன என்று கேட்டால் பதில் எவரிடமும் இல்லை. இன்னும் காத்துக்கொண்டிருங்கள் என்பதுதான், இப்போதும்கூட ஓர் அரசியல் பதிலாக இருக்கிறது.

பொங்கலுக்கு தீர்வு என்னும் நம்பிக்கை பின்னர் அடுத்த தீபாவளிக்குள் தீர்வு, சித்திரைக்குள் தீர்வு என்பதாக நீண்டு சென்றதே தவிர, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது இப்போதும் கானல்நீராகவே இருக்கிறது. ஆகக் குறைந்தது இலங்கையின் அரசமைப்பில் உள்ள விடயங்களைக்கூட அமுல்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க முடியாத நிலையிலேயே இன்றுள்ள தலைமைகள் இருக்கின்றன.

ஈழத் தமிழர்களுக்கு என்று ஒரு தனியான அரசியல் இல்லாமல் இருந்திருந்தால் - ஒருவேளை நிலைமைகள் சிறப்பாக இருந்திருக்குமோ? கடந்த காலத்தை திரும்பிப் பார்த்து சிந்திக்க முற்படும் ஒரு சராசரி மனிதன் இப்படியொரு கேள்வியை கேட்டால் அதனை தவறு என்று ஒருவர் வாதிட முடியாது - ஏனெனில், இன்றைய ஈழத் தமிழரின் நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

போராட்டம் என்னும் நிலைமை தேய்ந்து இறுதியில் போராடி என்ன பயன் என்னும் நிலைமைக்கே தமிழ் மக்கள் வந்து சேர்ந்திருக்கின்றனர். இன்று இடம்பெறும் அரசியல் எதிர்ப்பு நிகழ்வுகளை, சாதாரண தமிழ் மக்களோ, சாதாரணமாக கடந்து செல்கின்றனர். அது, தங்களுக்கானது என்று அவர்கள் நம்பக்கூடிய நிலையில் இல்லை. தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு என்பது ஒருபுறமாக இருக்கும்போது, மறுபுறம் வெசாக் பண்டிகையின்போது விகாரைகளில் கட்டப்பட்டுள்ள அலங்காரங்களை பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வரிசையில் நிற்கின்றனர். ஏனென்றால், எதிர்ப்பு அரசியல்மீதான நம்பிக்கை தமிழர்கள் மத்தியில் வற்றிவிட்டது.

# இலங்கை பொருட்கள் மீது 25 வீத மேலதிக வரி; ஏற்றுமதி நிறுவனங்களுக்குப் பெரும் நெருக்கடி

கொழும்பு, ஜன. 15

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஒரு பெரும் சோதனையாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் புதிய வர்த்தக உத்தரவு அமைந்துள்ளது.

ஈரானுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ள நாடுகள், அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும்போது 25 வீத மேலதிக வரியைச் செலுத்த வேண்டும் என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கையின் பிரதான ஏற்றுமதியில் ஒன்றான தேயிலையைக் கொள்வனவு செய்யும் முதல் பத்து நாடுகளில், ஈரானும் ஒன்றாக உள்ளது.

மாதாந்தம் சுமார் 9,800 மெட்ரிக் தொன் தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதேநேரம், இலங்கை ஏற்றுமதியின் மிகப்பெரிய சந்தையாக அமெரிக்கா திகழ்கின்றது.

இதன்படி, மொத்த ஏற்றுமதியில் 25 சதவீத பங்கைக் கொண்டுள்ள அமெரிக்கா மூலம், ஆண்டொன்றுக்கு சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கின்றது.

இந்தநிலையில் "ஈரானுடன் வணிகம் செய்யும் எந்தவொரு நாடும், அமெரிக்காவுடனான அனைத்து வர்த்தகங்களுக்கும் 25 சதவீத வரியைச் செலுத்தவேண்டியிருக்கும்" என ட்ரம்ப் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை பொருட்கள் மீது 20 சதவீத வரி அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மேலதிக 25 சதவீத வரி அமுல்படுத்தப்பட்டால், அமெரிக்க நுகர்வோருக்கு இலங்கை பொருட்களின் விலை கணிசமாக உயரும்.

இது இலங்கையின் ஏற்றுமதி வருவாயைக் குறைப்பதோடு, உலக சந்தையில் இலங்கை பொருட்களின் போட்டித்தன்மையையும் பாதிக்கும் என "அருதா" ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது. (அ)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் 300 வாகனங்கள் 6 மாதமாக முடக்கம்

## வாகன விலையை விட 3 மடங்கு வரி

கொழும்பு, ஜன. 15

முறையான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 300 புதிய வாகனங்கள், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடந்த ஆறு மாதங்களாக விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், தமக்கு ஏற்பட்டுள்ள பாரிய நிதி நெருக்கடி மற்றும் மன உளைச்சல்கள் குறித்து அவர்கள் விளக்கமளித்தனர்.

வாகனத்தின் உண்மையான விலையை விட மூன்று மடங்கு அதிகமான வரியைச் செலுத்துமாறு சுங்கத் திணைக்களம் கோருவதாக இறக்குமதியாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சில வாகனங்களுக்கு 10 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வரி விதிக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பிறகு, நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய வரித் திருத்தங்கள் மற்றும் மேலதிக தண்டப்பணங்கள் (சுமார் 50 வீத கூடுதல் வரி) காரணமாகவே இந்தச் சிக்கல் எழுந்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் வாகன வியாபாரிகள் அல்லர், மாறாகத் தமது வாழ்நாள் சேமிப்பைப் பயன்படுத்தி குடும்பத் தேவைக்காக எல்லைத் தாண்டிய கடன் கடிதங்கள் முறையின்கீழ் வாகனங்களை இறக்குமதி செய்த சாதாரண பொதுமக்களாவர்.


இது குறித்து கருத்து வெளியிட்ட சுங்கத் திணைக்களப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா, இந்த வாகனங்கள் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள எல்லைத் தாண்டிய கடன் கடிதங்கள் தொடர்பான வழக்குடன் தொடர்புடையவை என்று தெரிவித்தார்.

தற்போது உரிமையாளர்களுக்கு இரண்டு தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. சாதாரண வரியைச் செலுத்தி வாகனத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். ஆனால், நீதிமன்ற வழக்கு முடியும் வரை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனத்தைப் பதிவு செய்ய முடியாது. விதிமுறைகளை மீறியதற்கான தண்டப்பணத்தைச் செலுத்தி, உடனடியாக வாகனத்தைப் பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய சூறாவளி காரணமாகத் துறைமுகத்தில் உள்ள வாகனங்கள் சேதமடைந்திருக்கலாம் என்ற அச்சமும் நிலவுகிறது.

"நாங்கள் அனைத்து சட்டங்களையும் பின்பற்றினோம், ஆனால் இப்போது தண்டிக்கப்படுகிறோம்" என வேதனை தெரிவிக்கும் உரிமையாளர்கள், இவ்விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலையிட்டு தமக்கு நீதி பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தெளிவான முடிவுகள் எடுக்கமுடியாமல் குழம்புவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். நிதானம் தேவை.

**இடபம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். பயணாங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முன் கோபம் குறையும். உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதை கூடும்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். குறைகளில் கவனம் செலுத்த வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**தனுசு**
வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். பொறுமை தேவை.

**மகரம்**
புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் கை ஓங்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கும்பம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**மீனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று போதையில் சிகிச்சைக்கு வந்தவர் அடாவடி!

## பாதுகாப்பு உத்தியோகஸ்தருக்கும் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நிறைபோதையில் சிகிச்சை பெற வந்தவர், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு கத்தியால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

போதனா வைத்தியசாலைக்கு நேற்று அதிகாலை 1.40 மணியளவில் நிறைபோதையில் இரத்த காயங்களுடன் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரை 24ஆம் இலக்க விடுதியில் வைத்து சிகிச்சை வழங்கப்பட்டது.

இதன்போது, தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களுடன் அவர் முரண்பட்டதுடன், விடுதியில் ஏனைய நோயாளர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தும் விதமாக நடந்துகொண்டார்.


இதனை அடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது. அவர்கள் விடுதிக்கு விரைந்து குறித்த நபரை கட்டுப்படுத்த முயன்றபோது, தனது உடைமையில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி அச்சுறுத்தியுள்ளார்.

அவரை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடிக்க முற்பட்டவேளை ஒரு உத்தியோகத்தருக்கு கைகளில் காயம் ஏற்பட்டது. இதனை அடுத்து தாக்குதல் நடத்தியவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# கட்சி அலுவலக கதவுக்கு தீ வைப்பு



யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணத்தில் சர்வஜன அதிகாரம் கட்சி அலுவலகம் அமைந்துள்ள கடைத்தொகுதிக்கு இனம் தெரியாத நபர்கள் தீ வைத்துள்ளனர்.

தாவடிப் பகுதியில் இந்த கட்சி அலுவலகம் அமைத்துள்ள கட்டடத்துக்கே நேற்று புதன் கிழமை அதிகாலை தீ வைக்கப்பட்டுள்ளது.

இரு நபர்கள் அலுவலக கதவுக்கு தீ மூட்டிவிட்டு தப்பிச் செல்வது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமெராக்களில் பதிவாகியுள்ளது.

பூட்டப்பட்டிருந்த இரும்பு கதவுகளுக்கே தீ வைக்கப்பட்டமையால், பெரியளவிலான சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

# நாகர்கோவிலில் கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் நேற்று அதிகாலை அதிரடிப் படையினரால் பெருந்தொகையான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாகர்கோவில் பகுதியில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


இதன்போது 9 பொதிகளில் 14 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

கேரளக் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் தப்பி சென்றுள்ளதாகவும் அவர்களை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா மேலதிக விசாரணைகளுக்கு மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# அமைச்சரை சந்தித்தார் அவுஸ்திரேலியத் தூதுவர்



யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன்ஸ் நேற்று காலை தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

இந்த விஜயத்தின்போது கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகருடன் தூதுவர் கலந்துரையாடினார்.

கல்விச் சீர்திருத்தம், தொழிற் கல்வி மேம்பாட்டு விடயங்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர் எஸ்.கபிலன் ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலும் களைகட்டிய தைப்பொங்கல் வியாபாரம்!

## பொருள் கொள்வனவில் மக்கள் ஆர்வம்

கொழும்பு, ஜன. 15

தைப்பொங்கலை முன்னிட்டு இம்முறையும் கொழும்பு, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, செட்டியார் தெரு மற்றும் வெள்ளவத்தை போன்ற பகுதிகளில் பொங்கல் வர்த்தகம் களைகட்டியது.

பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காகத் தமிழர்கள் அதிகளவிலான பொருட்களைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக, பொங்கல் பானை, பூசைப் பொருட்கள், தின்பண்டங்கள் மற்றும் பொங்கல் அலங்காரப் பொருட்களான கரும்பு, மாவிலை தோரணம், தென்னம் தோரணம் போன்றவற்றை மக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைக்குப் பிற்பாடு, இந்த பொங்கல் வியாபாரமானது மிகவும் சிறப்பாக நடைபெற்றதாக கொழும்பு வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு வருடமும் புறக்கோட்டை பகுதியில் பொங்கல் வர்த்தகம் மிகவும் சிறப்பாக நடைபெறுவது வழக்கமாகும்.

(அ)

# மழை இன்றிலிருந்து குறையும்

கொழும்பு, ஜன. 15

நாட்டில் காணப்படும் மழையுடனான வானிலை இன்றிலிருந்து குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சிறிதளவில் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (அ)

# விமானத்தில் பணம், நகை திருட்டில் சீன பிரஜை பொலிஸாரினால் கைது!

கொழும்பு, ஜன. 15

டுபாயிலிருந்து கொழும்புக்கு விமானத்தில் பயணித்தபோது இலங்கைப் பெண்ணிடமிருந்து பணம் மற்றும் தங்க நகைகளைத் திருடியதாகக் கூறப்படும் சீனப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணால் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கைப்பையில் 3,660 அமெரிக்க டொலர்கள், 500 யூரோக்கள் மற்றும் தங்க நகைகளையும் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சந்தேக நபரை கிம்புலப்பிட்டியில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் வைத்து கைது செய்ததாகவும் அங்கு திருடப்பட்ட விலைமதிப்பற்ற பொருட்கள் அவரிடம் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தைப்பொங்கலை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

கொழும்பு, ஜன. 15

தைப்பொங்கலை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்குச் செல்பவர்களின் பயணத்தை சுமுகமாக நடத்தும் வகையில் விசேட போக்குவரத்து சேவைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை ஹற்றன், நுவரெலியா மற்றும் பதுளை உள்ளிட்ட பல நகரங்களுக்கு மேலதிக பஸ் சேவைகள் இயக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொது முகாமையாளர் டி.எச். ஆர்.டி. சந்திரசிறி தெரிவித்தார்.

(அ)

# விலங்குகளுக்கு பொருத்தப்பட்ட மின் வேலியில் சிக்கி தம்பதி பலி!

கொழும்பு, ஜன. 15

வரக்காப்பொல, ஹூனுவல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் கணவன்-மனைவி இருவரும் உயிரிழந்துள்ளனர்.

வயல் நிலத்தை விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கியே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹூனுவல, துல்ஹிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதான கணவரும், 58 வயதான மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சட்டவிரோத மின்சார இணைப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நிமிடம் மழை பெய்தாலே வெள்ள நீர் தேங்கும் சாய்ந்தமருது பெண்கள் சந்தை



அம்பாறை, ஜன. 15

10 நிமிடம் மழை பெய்தால் போதும் வெள்ள நீர் தேங்கும் பிரதேசமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது பெண்கள் சந்தை உள்ளது.

இன்று மட்டுமல்ல பருவ காலத்தில் கூட அடிக்கடி வெள்ள நீரினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்ற சந்தைப் பகுதியாக இது காணப்படுகிறது. இச்சந்தையை சூழ உள்ள மாநகர சபைக்கு உட்பட்ட உள் வீதிகளும் வெள்ள நீரில் மூழ்குவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு ஏற்படும் வெள்ள நீர் சந்தைக்கு வரும் மக்களை சிரமங்களுக்குள் உள்ளாக்குவதுடன் விபத்துக்களை ஏற்படுத்தவும் காரணமாக அமைகின்றது.

அத்துடன் இச்சந்தையை சுற்றி உள் வீதிகளில் காணப்படும் வடிகால்கள் நீண்ட காலமாக துர்வாரப்படாமையினால் நீர் தேங்கி வெள்ள நிலைமை ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

இது தவிர குறித்த சந்தை மேற் கூரையும் எவ்வித கவனிப்பாரற்று காணப்படுவதனால் பழுதடைந்து உடைந்து விழும் நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அபிவிருத்தி அரசியல் பங்கேற்பை மேம்படுத்தத் திட்டம்



திருமலை, ஜன. 15


கிழக்கு மாகாணத்தில் பெண்கள் அபிவிருத்தி மற்றும் அரசியல் பங்கேற்பை மேம்படுத்துவது தொடர்பான நிகழ்வு நேற்று முன் தினம் திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

அரசியலில் ஈடுபாடு கொண்ட பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்ட குறித்த நிகழ்வை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதில் வளவாளராக எம்.ஐ.எம்.சதாத் ,திட்ட வசதிப்படுத்துநராக துர்க்கா புலேந்திரன், சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் ஜெரோமி ரொமைன் ராஜெல் மற்றும் பெண் அரசியல் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இது கிழக்கு மாகாணம் முழுவதும் 10 அரை நாள் கொண்ட கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் சோதனை



மட்டக்களப்பு, ஜன. 15

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விசேட பரிசோனைகளை முன்னெடுத்தனர்.

களுவாஞ்சிகுடி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பரிசோதர்கள், உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பொருட்கள் மற்றும் பண்டங்களின் உற்பத்தி திகதி, காலாவதி திகதி, பொருட்களின் தரம் போன்ற பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

பட்டிருப்புத் தொதியின் வர்த்தக நகராக விளங்கும் களுவாஞ்சிகுடி நகரில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் பண்டிகைக் காலங்களில் அப்பகுதியில் சனக் கூட்டம் மேலும் அதிகரித்துக் காணப்படுவதோடு, வியாபாரங்களும் களைகட்டியிருப்பது வழக்கம். இந்நிலையில் சுகாதார பரிசோதகர்கள் தமது பரிசோதனைகளை முன்னெடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# சம்மாந்துறை பிரதேச கலை இலக்கிய விழா் கலைஞர்கள், இலக்கியவாதிகள் கௌரவிப்பு



அம்பாறை, ஜன. 15

சம்மாந்துறை பிரதேச செயலகம் மற்றும் கலாசார அதிகார சபை இணைந்து ஏற்பாடு செய்த "பிரதேச கலை இலக்கிய விழா நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் மிகச் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலக அதிகாரிகள், பல் துறை சார்ந்த கலைஞர்கள், இலக்கியவாதிகள், கல்வியாளர்கள் மற்றும் சமூகப் பிரமுகர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில், மறைந்த கலைவேள் கலாபூஷணம் மாறன் யூ செயின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவரங்கம் இடம்பெற்று, அவருடைய கலைப் பங்களிப்புகள் நினைவு கூரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பிரதேசக் கலைஞர்களின் திறமை மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டு பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றன.

சம்மாந்துறை பிரதேசத்தின் கலை மற்றும் கலாசார மேம்பாட்டிற்காக தொடர்ந்து ஆற்றிவரும் அரிய சேவைகளை அங்கீகரிக்கும் வகையில், பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபாவுக்கு கலாசார அதிகார சபையினால் சிறப்புப் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக, கலைத் துறையில் சாதனை படைத்த கலைஞர்களுக்கு உயரிய "சுவதம்" விருதுகள் பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. அதே போல், பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கலை மற்றும் இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# சமுர்த்தி திணைக்களத்தினால் வாழ்வாதார மேம்பாட்டு உதவி

அம்பாறை, ஜன. 15

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக 2025ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வலுவூட்டல் வேலைத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட பயனாளிகளுக்கான வாழ்வாதார மேம்பாட்டுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் சம்மாந்துறை பிரதேச செயலக சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைனின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹமது ஹனிபா தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு வாழ்வாதார உபகரணங்களை வழங்கினார்.

இந் நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இவ்வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் ஏற்கனவே சமுர்த்தி நிவாரணம் பெற்று தற்போது அஸ்வெசும பெற்றுக் கொள்ளாத 17 குடும்பங்களுக்கு மக்கள் பங்களிப்புடன் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ)

# சம்மாந்துறை மத்திய வட்டாரத்தில் வடிகால்கள் சீரமைப்பு பணி ஆரம்பம்


அம்பாறை, ஜன. 15

மழை காலங்களில் ஏற்படும் நீர்த்தேக்கம் மற்றும் சுற்றுப்புற சுகாதாரப் பிரச்னைகளைத் தடுக்கும் நோக்கில், சம்மாந்துறை மத்திய வட்டாரத்தில் மழைநீர் சீராக வடிந்தோடும் வகையில் அனைத்து வடிகால்களையும் துப்பரவு செய்து சீரமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகள், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிரின் ஆலோசனையின் கீழ், பிரதேச சபை உறுப்பினர் அமீர் அப்னானின் ஒருங்கிணைப்பிலும் பிரதேச சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுப்புறத்தை சுத்தமாக பேணுவதும், மழை நீர் தேங்கி நோய் பரவும் சூழ்நிலைகளைத் தவிர்ப்பதும் இப்பணிகளின் முக்கிய நோக்கமாகும். (அ)

# களுவாஞ்சிக்குடி நகரத்தில் நேற்று களைகட்டிய பொங்கல் வியாபாரம்



மட்டக்களப்பு, ஜன. 15

உழவர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி நகரில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் பொதுமக்கள் நேற்று அதிகளவில் பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.

வர்த்தக நிலையங்களிலும், ஏனைய வியாபார ஸ்தலங்களிலும் வியாபாரம் களைகட்டிய நிலையில் மக்கள் புத்தாடைகளையும், ஏனைய வீட்டு பாவனை பொருட்களையும், மண் பானை, மண் சட்டி போன்ற பொங்கலுக்கான பொருட்களையும் கொள்வனவு செய்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையற்ற...

ஜனாதிபதியின் தேசிய வேலை திட்டத்தை கிராம மட்டங்களுக்கு விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைத்துள்ளோம்.

போதையற்ற நாட்டை வெறுமனே பாதுகாப்பு தரப்பினரால் உருவாக்கிவிட முடியாது. மக்களின் பூரண ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே உருவாக்க முடி யும். இதற்காகவே கிராம மட்டங்களிலிருந்து போதைப்பொருளை ஒழிப்பதற்கான விசேட வேலைத் திட்டம் 25 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இதனை நாம் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும்.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னர் நாட்டில் புரையோடி இருந்த போதைப்பொருள் கலாசாரம் இன்றும் செயல்பட்டு கொண்டிருக்கின்ற நிலையில் அதற்கு எதிராக எமது அரசாங்கம் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்தப் போராட்டத்தில் எமக்கு பெரும் சவால்கள் விடப்பட்டன. அரசாங்கம் என்ற வகையில் நாட்டையும் நாட்டு மக்களையும் போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்காக எத்தகைய சவாலையும் எதிர் நோக்க தயாராக இருக்கிறோம்.

வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தலைமையில் யாழ். தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் போதை ஒழிப்பு விசேட வேலைத்திட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும். ஜனாதிபதியின் போதை ஒழிப்பு தேசிய வேலைத் திட்டத்தை 'மக்களின் வேலைத்திட்டமாக வெற்றிகர மாக நிறைவேற்றுவதற்கு வடக்கு மக்கள் ஜனாதிபதியுடன் கைகோக்க வேண்டும் - என்றார். (ஐ)

## ஒரு தேசமாக...

வேலைத்திட்டத்துடன் மென்மேலும் வலுவாக கைகோக்க முன்வருமாறு இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நான் அனைவரிடமும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில், அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்களால் மிகுந்த பக்தியுடனும் உற்சாகத்துடனும் இன்று தைப்பொங்கல் தினம் கொண்டாடப்படுகின்றது. வெற்றிகரமான விளைச்சலுக்கு உதவிய சூரியக் கடவுளுக்கும் கால்நடைகளுக்கும் இயற்கை அன்னைக்கும் நன்றி உணர்வை எடுத்தியம்பும் கொண்டாட்டமாக தைப்பொங்கல் தினம் அமைகிறது. செழிப்பு மற்றும் நன்றியுணர்வை அடையாளப்படுத்தும் தைப்பொங்கல் பண்டிகை, சிறந்த விளைச்சலுக்கு நன்றி பாராட்டும் ஒரு நிகழ்வு மாத்திரமன்றி, எதிர்காலத்தில் தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குவதற்கான அழைப்பாகவும் அமைகிறது.

அண்மையில் நாம் சந்தித்த மிகப்பெரும் இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து, ஒரு தேசமாக மீண்டெழும் நம்பிக்கையுடனும் அயராத முயற்சி மற்றும் உறுதியுடனும் இதுவரை இல்லாத அளவிலான பாரிய புனரமைப்பு செயல்பாட்டில் நாம் ஒன்றாக கைகோத்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்துடன் மென்மேலும் வலுவாக கைகோக்க முன்வருமாறு சுபீட்சமான எதிர்பார்ப்புடன் இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நான் அனைவரிடமும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இயற்கையுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய அவசியம் முன்னெப்போதையும் விட அதிகமாக உணரப்படும் இந்த நேரத்தில், இயற்கையுடன் ஆழமாக இணைக்கப்பட்ட தைப் பொங்கல் பண்டிகை நமது வாழ்க்கைக்கும் சமூகத்துக்கும் உயர்வான அர்த்தத்தைச் சேர்க்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். எந்தவொரு இருளுக்கும் பிறகு ஒளி பிறக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். உறுதியுடனும் ஒற்றுமையுடனும் சவால்களை வென்று "வளமான நாடு - அழகான வாழ்க்கையை" கட்டியெழுப்புவதற்கான பயணத்துக்கு இவ்வருட தைப்பொங்கல் பண்டிகை சிறந்த ஆசீர்வாதமாக அமைய பிரார்த்திக்கிறேன். இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியான தைப்பொங்கல் தின வாழ்த்துகள் - என்றுள்ளது. (ஐ)

## போதைப்பொருள்...

தேசிய செயற்பாடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மாவட்டச் செயற்பாட்டுக் குழுவை உருவாக்குவதற்கான கிளிநொச்சி மாவட்ட கலந்துரையாடல் நேற்று புதன் கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத் திறன்விருத்தி மண்டபத்தில், மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கருத்துரைத்த ஆளுநர் மேலும் கூறுகையில்,

எமது நாட்டில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் இளம் சமுதாயம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எவ்வளவோ குடும்பங்கள் தங்களின் வாழ்க்கையைத் தொலைத்துள்ளன. அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், இந்த உயிர்கொல்லி போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதுக்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே பிரதேச மற்றும் மாவட்ட மட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுகின்றன.

போதைக்கு அடிமையானவர்களை மீட்பதுக்குரிய செயற்றிட்டமும் அவசியமானது. வடக்கு மாகாணத்தில் இதற்கெனத் தனியான புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ)

## பால்மாவின்...

அறிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ பால்மா பொதி விலை 125 ரூபாயாலும் 400 கிராம் பால்மா பொதி 50 ரூபாயாலும் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் இந்த புதிய விலை நடைமுறைக்கு வரும் என்றும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## திருகோணமலை...

கடந்த நவம்பர் மாதம் கரையோர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீறி கடற்கரையில் கட்டுமானத்தை அமைத்தமை மற்றும் சிலையை வைத்தமை தொடர்பில் வனவாசி பலங்கொட கசியப்ப தேரர், திருகோணமலை கோட்டை விகாராதிபதி கல்ஞான வன்ச திஸ்ஸ தேரர், சுகித்த வன்ச தேரர், சிறிமாபுர விகாரையைச் சேர்ந்த நந்த தேரர் ஆகிய தேரர்களும் கோட்டை விகாரையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான தீபானி லியனகே, விதுரங்க லொக்கு கலப்பதி, எல்.ரீ.பெரேரா, பியலால் பிறேமசிறி, தெக்கும் துலார குணதிலக ஆகியோருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுதிப்ப லியனகே, சுகத் பிரசன்ன ஆகிய மேலும் இருவர் எதிரிகளாக பெயரிடப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் முற்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், இவர்கள் இருவர் தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணி ஒருவரும், பொலிஸ் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணி ஒருவரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

கரையோர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றத்துக்கு இல்லை. மேல் நீதிமன்றத்துக்கு மட்டுமே பிணை வழங்கும் அதிகாரம் உள்ளது. இதனால் நேற்றைய தினம் எதிராளிகளை பிணையில் விடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் பிணை வழங்கப்படவில்லை.

சர்ச்சைக்குரிய இடத்தில் மேசை ஒன்றின்மீது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றி நான்கு தூண்கள் நிறுத்தப்பட்டு, அவற்றின் மீது அஸ்பெஸ்டேட் சீற் போடப்பட்டு ஒரு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொட்டகையே கரையோரப் பாதுகாப்புக் கட்டளை கட்டத்தை மீறி அமைக்கப்பட்டதாக நேற்றைய வழக்கில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேசையில் வைக்கப்பட்ட சிலை அல்லது அந்தக் கொட்டகையை அகற்றுவது தொடர்பான ஏற்பாட்டுக்கு இணங்காத நிலையிலேயே எதிராளிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கொட்டகையை உடனடியாக அகற்றுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதி...

மின்சார திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுவார்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் பிற்பகல் 2 மணியளவில் வேலணை ஐயனார் கோயில் முன்றலில் நடைபெறும் பொங்கல் விழாவில் பங்கேற்பார். பின்னர், அன்று பிற்பகல் 4 மணியளவில் மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் வளாகத்தில் வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி சபையால் நடத்தப்படும் பொங்கல் விழாவில் பங்கேற்பார்.

நாளை வெள்ளிக்கிழமை தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் காலை 09.30 மணியளவில் நடைபெறவுள்ள "தமக்கான இடம் அழகிய வாழ்க்கை" இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியமர்த்தும் வீட்டுத் திட்டத்தில் பங்கேற்பார். இதன்போது, பயனாளர்களுக்கு நிவாரண நிதி காசோலைகளை வழங்கி வைப்பார்.

பின்னர், பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெறவுள்ள போதைப்பொருட்களுக்கு எதிரான "முழு நாடும் ஒன்றாக" தேசிய கருத்திட்ட நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்று சிறப்புரை ஆற்றுவார்.

## 13 நாட்களில்...

அதிபர் டபிள்யூ. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள் ளார்.

ஆண்டின் முதல் 13 நாட்களில் மட்டும் 77 பெரும் விபத்துகள் பதிவாகியுள்ளன. இவற்றில் 82 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு இடம்பெற்ற விபத்துகளில் பெரும்பாலானவை மதுபோதையில் வாகனம் செலுத்தியமையால் ஏற்பட்டவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, இந்தக் காலப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக 7 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை பரிசோதிக்க 75 ஆயிரம் கருவிகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன. மதுவைத் தவிர ஏனைய போதைப்பொருட்களைப் பயன்படுத்தி வாகனம் செலுத்துபவர்களைக் கண்டறியும் முன்னோடித் திட்டம் தற்போது கொழும்பு பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது - என்றும் அவர் கூறியுள்ளார்.

## இணக்கப்பாடுகள்...

உண்மையான பிரச்னைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கு குறுகியகால அல்லது நீண்ட கால கொள்கைகள் எவையும் உள்ளடக்கப்படவில்லை. இதனால் சுகாதாரத் துறையினர் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், சுகாதார பிரச்னைகளுக்குத் தீர்வுகோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்த பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடர் ந்து, சுகாதார அமைச்சரால் வழங்கப்பட்ட எழுத்துமூல இணக்கப்பாடுகளின் அடிப்படையில் அந்தப் போராட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது, வழங்கப் பட்ட இணக்கப்பாடுகளை நிறைவேற்றி பிரச்னைக ளைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சருக்கும் சுகாதார அமைச்சுக்கும் மேலும் 10 நாட்கள் கால அவகாசம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் பிரச்னைகளுக்குத் தீர்வு காணத் தவறினால் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க நிறைவேற்றுக்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மின்சார...

எனினும், 2026ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மின்சார கட்டண திருத்தத்தை மேற்கொள்ளாதிருக்கத் தீர்மானித்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சார கட்டணத் திருத்த முன்மொழிவை பெப்ரவரி 13ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## கஞ்சாவுடன்...

வழங்கிய தகவலின் அடிப்படையில் பருத்தித்துறை - இன்பருட்டி கடற்கரை பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 28 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## புதிய...

குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

உழைப்புக்கும், இயற்கைக்கும் நன்றி செலுத்தும் உன்னத பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு என்ற ரீதியில் நாம் இன்று ஒரு தீர்க்கமான மாற்றத்தின் விளிம்பில் நிற்கின்றோம். கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்கள் ஊடாக, மனப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி, தேசத்தை ஒரு "மறுமலர்ச்சி யுகத்தை" நோக்கி இட்டுச் செல்லும் பெரும் பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. சவால்கள் நிறைந்ததாக இருப்பினும் ஓர் அரசாங்கமாக நாம் அந்த பொறுப்பை ஏற்று, தேசத்தின் பரிணாம வளர்ச்சிக்கான புதிய வருடத்தை உறுதியுடன் ஆரம்பித்துள்ளோம்.

ஒருவரையொருவர் மதித்தல், பிற மத மற்றும் கலாசார உரிமைகளைப் பேணுதல் போன்ற உயரிய பண்புகளுடன், நல்லிணக்கம்மிக்க ஒரு புதிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு இந்தத் தைப்பொங்கல் திருநாளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதி பூணுவோம். தைத்திருநாளைக் கொண்டாடும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரார்த்தனைகளும் நிறைவேறவும், இப்புதிய பயணம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் செழிப்பையும் கொண்டுவரவும் இத்திருநாளில் மனதார வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது.

இதேவேளை, தேசிய பொங்கல் விழா பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இன்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# போதைப்பொருள் நாட்டுக்குள் வருவதை தடுக்க நடவடிக்கை!

## அமைச்சர் ஆனந்த விஜயபால

கிளிநொச்சி, ஜன. 15

போதைப்பொருள் நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதும், அதற்கான கேள்வியை குறைப்பதும் என்ற இரு வழிகளில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சுமார் 450 பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

"முழுநாடுமே ஒன்றாக" என்ற தேசிய போதைப்பொருள் ஒழிப்பு செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்ட செயற்பாட்டுக் குழுவை அமைப்பதற்கான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால-

இன, மத பேதம் எதுவுமின்றி எமது பிள்ளைகள் இந்த உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. நாம் இதைக் கட்டுப்படுத்துவதுக்கு இரண்டு வழிகளில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஒன்று, நாட்டுக்குள் போதைப்பொருள் வருவதைத் தடுப்பதுக்குரிய நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளோம்.

இரண்டாவது, நாட்டுக்குள் போதைப்பொருளுக்கான கேள்வியைக் குறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அதன் ஒரு கட்டமாகவே இவ்வாறான பிரதேச மற்றும் மாவட்டக் குழுக்களை நிறுவுகின்றோம். இவர்கள் ஊடாகப் பரந்துபட்ட விழிப்புணர்வுகளை மேற்கொள்வதன் மூலம் போதைப்பொருளுக்கான கேள்வியைக் குறைக்க முடியும். விநியோகத்தை நிறுத்தல் மற்றும் கேள்வியை இல்லாமல் செய்தல் ஆகிய வழிமுறைகள் ஊடாக இதைக் கட்டுப்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

உங்கள் பிள்ளைகள் போதைப்பொருளைப் பயன்படுத்தவில்லை என்பதற்காகப் பெற்றோர்களாகிய நீங்கள் மௌனமாக இருக்க வேண்டாம். இந்தத் தேசிய செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்வதன் ஊடாகவே, எந்தவொரு காலத்திலும் எங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க முடியும்.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சுமார் 450 பொலிஸாரைக் கூட நாம் பணி நீக்கம் செய்துள்ளோம். மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வு நிலையத்தை நிறுவுவதுக்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்-என்றார். (அ)

# மாடியில் இருந்து வீழ்ந்து சுவீடன் யுவதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 15

நீர்கொழும்பு பகுதியில் உள்ள பிரபல விடுதி ஒன்றின் கட்டடத்தில் இருந்து கீழே வீழ்ந்து 26 வயதுடைய சுவீடன் நாட்டுப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த யுவதி நீர்கொழும்பு பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் 9ஆவது மாடியில் தங்கியிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விசாரணைகளின்படி, உயிரிழந்த பெண் திருமணமானவர் என்பதும், அவரது கணவர் ஒரு தொழிலதிபர் என்பதும் தெரியவந்துள்ளது.

சம்பவம் நடந்த நேரத்தில் அவரது கணவர் வணிக நிமித்தமாக குருநாகல் பகுதிக்கு சென்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கீழே வீழ்வதற்கு முன்னதாக சுமார் ஒரு மணி நேரம் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் அவரது கையடக்கத் தொலைபேசியை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)

# காற்றாலை திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் கையகப்படுத்திய நிலங்களை விடுவிக்குக!

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

மன்னார், ஜன. 15

மன்னாரில் காற்றாலை திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கு முன்னர், கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுவிக்கவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மன்னார் தீவு பகுதிக்குள் காற்றாலை, கனிம மண் அகழ்வு திட்டங்கள் வேண்டாம் எனும் மன்னார் மக்களின் கூட்டு கோரிக்கையை அடியோடு நிராகரித்து, ஆட்சியாளர்கள் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது தொடர்பில் ஆழ்ந்த கவலை அடைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மாவட்டம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும் என்பதால், அதன் இயல்பைக் கெடுக்காமல் பாதுகாப்பதே அவசியம் என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், மக்களின் கூட்டுக் கோரிக்கையை குழி தோண்டி புதைத்து விட்டு திட்டமிட்டபடி 14 காற்றாலைக்கான பணிகளும் நடைபெறுவதாக வி.எஸ் சிவகரன் தெரிவித்துள்ளார்.

கனிம மணல் அகழ்வு முற்றாக நிறுத்தப்படும் எனக் கூறியபோதும், கனிம மண் அகழ்வுக்குரிய இரண்டு நிறுவனங்களும் தமது செயற்பாட்டைத் தொடர்ந்த வண்ணமே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, மன்னாரின் வளத்தையும் சுரண்டி, மக்களின் வாழ்வியலை கெடுப்பது நியாயமா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

# அமெ. ஜனாதிபதியை சந்தித்து அரசைப் பற்றி முறையிடுவேன்

## மிகிந்தலை தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், குறிப்பாக கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குணவெவே தம்மரதன தேரர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து, இலங்கை அரசாங்கம் நாட்டை எவ்வாறு சீரழிக்கிறது என்பதை நேரில் விளக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தமக்கு தெரிந்த மாணவர் ஒருவர் ட்ரம்ப் குடும்பத்துடன் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பைப் பயன்படுத்தி, ஏற்கனவே இலங்கைக்கு விதிக்கப்பட்டிருந்த அமெரிக்க வரி ஒன்றைக் குறைக்க உதவியதாகத் தேரர் ஒரு தகவலை வெளியிட்டுள்ளார். (அ)

# டித்வா இடரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா

கொழும்பு, ஜன. 15

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் ரூ.10,000 மேலதிக கொடுப்பனவு வழங்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

இக்கொடுப்பனவிற்கான அனைத்து நிதி ஒதுக்கீடுகளும் அந்தந்த மாவட்ட செயலகங்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் ஏற்கனவே ரூ.15,000 கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட அனைத்து மாணவர்களும் இந்த புதிய கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களாவர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மைய பாதீட்டுத் திட்ட உரையின்போது அறிவித்ததற்கிணங்க, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பாடசாலை மாணவருக்கும் இதன் மூலம் மொத்தம் ரூ.25,000 நிதியுதவி கிடைக்கப் பெறவுள்ளது. (அ)

# அரச அலுவலகங்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்!

## மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல்

கொழும்பு, ஜன. 15

நாட்டில் தொடர்ச்சியாக அரச அலுவலகங்களுக்கு மின்னஞ்சல் மூலமாக வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்படும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்துள்ளன.

பதுளை மாவட்ட தொழில் காரியாலயத்துக்கு நேற்றுக் காலை 9:24 மணியளவில் மின்னஞ்சல் மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதனால் வளாகத்தில் குண்டு இருப்பதாகக் கூறி ஊழியர்களை வெளியேற்றுமாறு அதில் கோரப்பட்டிருந்தது. உதவித் தொழில் ஆணையாளர் சுஜாதா குமாரி இது குறித்துப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, அங்கு பாதுகாப்புச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி கண்டி மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு வந்த மிரட்டலில், செயலக வளாகத்தில் உள்ள வாகனம் ஒன்றில் குண்டு பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 26ஆம் திகதி காலை 10 மணியளவில் மோப்ப நாய்கள் மற்றும் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் அங்கு குவிக்கப்பட்டனர். பிரதான நுழைவாயில் மூடப்பட்டதால் பொதுமக்கள் பல மணிநேரம் காத்திருக்க நேரிட்டது.

வாகனங்களுடன் வந்த ஊழியர்கள் அனைவரும் வாகனங்களுக்கு அருகிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுச் சோதனையிடப்பட்டனர்.

மேலும் கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி நாவலபிட்டி பஸ்பாகே கோரளை பிரதேச செயலகத்தின் களஞ்சிய அறையிலுள்ள வெளிநாட்டு கூடாரம் ஒன்றிற்குள் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக மிரட்டல் விடுக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் கூறப்படும் அந்த மின்னஞ்சலில், 29ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு குண்டு வெடிக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினர் சோதனைகளை மேற்கொண்டனர். எனினும், சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எதுவும் மீட்கப்படவில்லை.

இந்த சம்பவங்களில் வெடிகுண்டுகள் எவையும் மீட்கப்படவில்லை. இதனால் இந்த திட்டமிட்ட போலி மின்னஞ்சல்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜோன்ஸ்டனின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 15

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மார்ச் மாதம் 04 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் மொஹமட் மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மொஹமட் [illegible] ஆகிய பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

அவர்கள் இருவரும் வெலிசறை நீதவான் நீதிமன்றத்தினால் வேறு ஒரு வழக்குக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர்களது சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

இதன்படி, இந்த வழக்கை மீண்டும் மார்ச் மாதம் 04 மற்றும் 18 ஆம் திகதிகளில் விசாரணைக்கு அழைக்குமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதவான், அன்றைய தினம் சாட்சியாளர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு தெரிவித்து அழைப்பாணை விடுவிக்குமாறும் கட்டளையிட்டார்.

அன்றைய தினம் பிரதிவாதியான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில் இருப்பார்களாயின், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.

வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், சத்தோச நிறுவன ஊழியர்களை உத்தியோகபூர்வ கடமைகளில் இருந்து விடுவித்து, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.